# சமத்துவ சமுதாயம் அமைப்போம்
## (குறுநாடகம்)

**காட்சி - 1**

இடம்: ‘லிட்டில்’ வீடு; பாத்திரங்கள்: லிட்டில், ஏஞ்சல், மெடோனா

**மெடோனா :** ஏய்! லிட்டில் சீக்கிரம் கிளம்பு. Bible Classக்கு நேரமாயிட்டு.

**லிட்டில் :** கொஞ்சம் wait பண்ணுங்கப்பா. அம்மா, காலைல விடிஞ்சதுல இருந்து இருமிக்கிட்டே இருக்காங்க. ‘கசாயம்’ போட்டிக் கிட்டிருக்கேன். கொடுத்துட்டு வந்திரேன்.

**ஏஞ்சல் :** சரியா போச்சு. இவ அவ அம்மாவுக்கு treatment கொடுத்துட்டு வர்ரதுக்குள்ள Bible Class ஆரம்பிச்சிடும். Sister இன்னைக்கு Quiz Programme வச்சிருக்காங்க. கேள்வி கேட்பாங்க. பதில் சொன்னா Prize-ல்லாம் தருவாங்க. வசனம் எல்லாம் நல்லா பாராம படிச்சிருக்கேன்.

**மெடோனா :** ஏஞ்சல், சீக்கிரம் வாடி. கிளம்புவோம் லிட்டில் மெதுவா அவ அம்மாவப் பார்த்துட்டு வருவா. இவ வாங்க இருக்கிற Prize-ஐ நம்ம வாங்கிடுவோம்.

**ஏஞ்சல் :** ஆமாமா, இவ சீக்கிரம் வந்தா இவதான் டக்-டக்னு பதில் சொல்வா. வா போவோம்.

**காட்சி - 2**

இடம்: தெரு; பாத்திரங்கள்: மெடோனா, ஏஞ்சல், இசக்கி, நசிமா, லிட்டில், சிஸ்டர்

**ஏஞ்சல் :** ஏய் மெடோனா, அங்க பாரு, யாரு வர்ரான்னு

**மெடோனா :** அட, இசக்கியம்மா. அன்னைக்கு என்கிட்ட, பரீட்சை பேப்பருக்கு காசில்லைன்னு ரூ. 10 கடன் வாங்கினா. இன்னும் தராம என் கிட்டேயிருந்து ஒளிஞ்சிக்கிட்டிருந்தா. இன்னைக்கு வசமா, மாட்டிக்கிட்டா இன்னைக்கு இவள சும்மா விடக்கூடாது. ஏய் இசக்கி, இங்க வாடி என் பத்து ரூபா என்னாச்சு.

**இசக்கி :** தந்திருவேன், மெடோனா, அப்பா ஒரு வாரமா தொழிலுக்குப் போகல. அம்மா நாளைல இருந்து பலகாரம் சுட்டு விற்கலாம்னு இருக்காங்க இன்றும் 2 நாள்ல கண்டிப்பா தந்திரேன்.

**மெடோனா :** அதெல்லாம் முடியாது, இப்பவே தரனும், இல்லாட்டா நீ ‘டிமிக்கி’ கொடுத்திருவ (அவள் சட்டையைப் பிடிக்கிறாள்)

**நசிமா** : (இசக்கியின் தோழி) பாவம்டி இசக்கி. ஏன்டி அவ சட்டையைப் பிடிக்கிற.

**ஏஞ்சல்** : வந்திட்டா பெரிசா, இவளுக்கு வக்காலத்து வாங்க. ஏன் நசிமா, உன் friend உனக்கு ஏதாவது பங்கு தந்திருக்காளா, அப்படினா நீயே பணத்தைக் கொடு.

**நசிமா** : ஏய் ஏஞ்சல், என்ன, வாய் நீளுது. நியாயத்தைப் பேச வந்தா, வக்காலத்து அது இதுன்னு சொல்ற. ரொம்ப பேசின பல்லத் தட்டிருவேன்.

**மெடோனா** : என்னடி, பல்லத் தட்டிட்டு இங்கே இருந்து போயிருவியா?

**ஏஞ்சல்** : அதான் சாதி சனம் பார்த்து பழகனும்னு எங்க அம்மா சொல்வாங்க. கண்ட கண்ட ஜாதிகளுக்கெல்லாம் உதவினா நமக்கு இந்த நிலமதான்.

**இசக்கி** : யாரப் பார்த்து கண்ட கண்ட ஜாதின்னு சொல்ற. நீ என்ற உசந்த ஜாதியா, உன்ன என்ன பண்றேன் பாரு.

(அடிபிடி சண்டை பிடிக்கிறார்கள்)

**லிட்டில்** : (ஓடி வருகிறாள்) ஏய் நிறுத்துங்கடி, உங்க சண்டைய. Bible Classக்கு நேரமாயிட்டுன்னு என்ன விட்டுட்டு வந்திட்டு இங்க சண்டை போட்டுக் கிட்டிருக்கீங்களே, உங்களுக்கு வெக்கமாயில்ல. விவிலியத்தை பாராம படிச்சு Prize. வாங்குறதில குறியா இருக்கியே ஏஞ்சல், அதுல இயேசு "ஒரு கன்னத்துல அறைந்தவனுக்கு மறு கன்னத்தை காட்டச்" சொல்லியிருக்கிறாரே அதப் படிக்கலையா. நம் சகோதரருக்கு செய்யும் உதவி அவருக்கே செய்ற உதவின்று சொல்லி-யிருக்கிறாரே அது தெரியாதா? நீங்க ஒருத்தரையொருவர் வார்த்தையாலேயே பழிவாங்குகிறீங்களே. நாம கிறிஸ்தவங்களா இருக்கிறதில் ஒரு அர்த்தம் வேண்டாமா வெறும் 'வார்த்தைக் கிறிஸ்தவர்களா' இருந்தா போதுமா! 'வாழ்க்கைக் கிறிஸ்தவர்களா" வாழ வேண்டாமா?

**சிஸ்டர்** : (வருகிறார்) Very good லிட்டில். இந்த சின்ன வயதில உனக்கு இவ்வளவு ஞானமா?

**லிட்டில்** : (வெட்கத்துடன்) Sorry Sister, Bible Class-க்கு கொஞ்சம் லேட்டாயிட்டு.

**சிஸ்டர்** : பரவாயில்லம்மா, அதான் நீயே இன்னைக்கு Bible Class நடத்திட்டியே. நானும் வெளிய போயிட்டு இப்பத்தான் வர்ரேன். வர வழியிலே இவங்க போடற சண்டையையும் நீ அழகா அவங்களுக்கு சொன்ன அறிவுரையையும் கேட்டுக் கொண்டிருந்தேன்.

**லிட்டில்** : Sister, நான் அதிகப் பிரசங்கித்தனமா, பேசியிருந்தா என்னை மன்னிச்சிருங்க. Sister

**சிஸ்டர்** : இல்லம்மா, இன்னும் அதிகமா இவங்ககிட்ட பேசனும். பிள்ளைகளே! இயேசு 'நான் உங்களை நேசிப்பது போல

நீங்களும் ஒருவருக்கொருவர் நேசியுங்கள்னு சொன்னது உங்களுக்குத் தெரியாதா. நீங்க சின்னக் குழந்தைகள். நீங்க ஒருவருக்கொருவர் அன்பா இருந்தாத்தான் வளர்ந்த பிறகும் வாழ்க்கைல ஒருத்தருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ முடியும். எல்லோரும் இயேசுவின் குழந்தைகள். யார் உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு நம்மிடம் இருக்கக் கூடாது. குறிப்பா மற்ற மதத்தினரையும், பிற சாதியினரையும் மதித்து அவர்களையும் நம் சகோதரர்களாக ஏற்று வாழ வேண்டும். அப்பதான் நாம் எல்லோரும் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.

**ஏஞ்சல்** : Sorry Sister, இனிம எல்லோரும் ஒன்னா இருப்போம் Sister, சண்ட போடமாட்டோம்.

**மெடோனா** : இசக்கி, நீ எனக்கு பத்து ரூபாய திருப்பித் தரவேண்டாம். உனக்குக் கஷ்ம்னா சொல்லு. நானும் என் friends-ம் உதவி செய்றோம். நசிமா நீ கூட எங்கள மன்னிச்சுக்க.

**இசக்கி** : எங்க மேலேயும் தப்பு இருக்கு

**நசிமா** : நீங்களும் எங்கள மன்னிச்சுக்கிருங்க. லிட்டில்! உனக்கு ரொம்ப நன்றி.

**லிட்டில்** : நீங்கல்லாம் இப்படி ஒன்றாக சேர்ந்ததுக்கு கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

**திருமதி. ஜோ. ரெஜினா கிரகோரி**

*தூத்துக்குடி மறைமாவட்டம்*

